யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

FWC

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | நாடகமும் அரங்கியலும் - II |
|---|---|---|

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 5 | 11) | 4 | 21) | 3 | 31) | 5 |
| 02) | 3 | 12) | 4 | 22) | 5 | 32) | 5 |
| 03) | 1 | 13) | 1 | 23) | 5 | 33) | 1 |
| 04) | 4 | 14) | 2 | 24) | 3 | 34) | 3 |
| 05) | 1 | 15) | 1 | 25) | 1 | 35) | 1 |
| 06) | 2 | 16) | 2 | 26) | 4 | 36) | 3 |
| 07) | 5 | 17) | 3 | 27) | 1 | 37) | 2 |
| 08) | 2 | 18) | 5 | 28) | 2 | 38) | 5 |
| 09) | 2 | 19) | 1 | 29) | 4 | 39) | 4 |
| 10) | 2 | 20) | 2 | 30) | 3 | 40) | 3 |

## பகுதி - II

### பிரிவு - A

01)

**i) சாகுந்தல நாடகத்தின் கற்பசைன் சிறப்பு**

- ✶ சாதாரண கதைப் பொருளை உயர்ந்த காதல் கதையாக பயன்படுத்தியமை.
- ✶ சாபம், கணையாழி ஆகிய நுட்பங்களை பயன்படுத்தியமை
- ✶ வெவ்வேறு பண்பாடுகளை ஒரு தளத்தில் இட்டுச் சென்றமை.
- ✶ குற்றமில்லாத பாத்திரப் படைப்பு
- ✶ பாத்திரம் அறிந்து கொள்ளாத மோதுகைகள்
  (பார்வையாளருக்கு தெரியும் வகையில் மோதுகை)

**கவித்துவம்**

- ✶ பாத்திரங்களின் உணர்வுகள் கலித்துவ நடையில் வெளிப்பட்டமை.
- ✶ இயற்கை வர்ணனை காணப்பட்டமை.
- ✶ காதல் காட்சி, பிரிவுக் காட்சிகளில் உயர் கலித்துவ செழுமை காணப்படுதல்.
- ✶ பிரிவுக் காட்சி 4 வது அங்கத்தில் சகுந்தலை ஆச்சிரமத்தை விட்டு நீங்கும் காட்சி.
- ✶ 6 வது அங்கத்தில் பிரிவுத்துயர் வெளிப்படுதல்.

**நாடக ஆக்கத்திறன்**

- ✶ ஆதிகாரிகம், பிராசங்கிகம் ஆகிய கதைப் பின்னல் பயன்படுத்தப்படுதல்
- ✶ ரஸ வெளிப்பாடு, அபிநய வெளிப்பாடு காணப்படல்.
- ✶ உலகப் பொதுமையான முறையில் நாடகம் படைக்கப்பட்டிருத்தல்
- ✶ நாட்டிய சாத்திர மரபு பேணப்பட்டமை.
- ✶ அங்கமரபு, சூத்திரதாரி, தவிர்க்க வேண்டிய செயல்கள்
  (குறிப்பிட்ட விடயங்கள் விளக்கப்பட்டிருப்பின் 7 புள்ளி வழங்கவும்)

ii) ஒதெல்லோ நாடகத்தின் கலித்துவம்

- ✶ ஒதெல்லோ செனட் சபையில் டெஸ்ரிமோனாவை திருமணம் செய்தமுறை பற்றி விளக்கல்
- ✶ ஒதெல்லோ படுக்கை அறையில் வெளிப்படுத்திய தனிமொழி
- ✶ பாத்திரப்பண்பு, பாத்திர மனநிலை என்பவற்றை வெளிப்படுத்தும் மொழிநடை

**கற்பனைச் சிறப்பு**

- ✶ பாத்திரப் பண்பு, கதை நகரும் முறமை, நெருக்கடியான காட்சிகள், டெஸ்ரிமோனா நேர்மையானவள் என்பதை புரிந்து கொள்ளும் தன்மை.

  Eg:- துருக்கியரின் போர் தொடர்பான ஆர்வம் எற்படுத்தப்பட்டு புயலை காரணம் காட்டி துருக்கியரின் போர் நிறைவேற்றப்படுதல்.
- ✶ இயாகோவின் சூழ்ச்சிகள்
- ✶ கவித்துவ உவமைகள்
- ✶ பாத்திரத்தின் மனநிலை ரீதியான போராட்டங்கள்

**நாடக ஆக்கத்திறன்**

- ✶ நெருக்கடியான தருணத்தில் கதை ஆரம்பமாதல்
- ✶ ஒதெல்லோ, டெஸ்ரிமோனா ஆகிய பாத்திரங்களுக்கு தெரியாத வகையில் பார்வையாளருக்கு தெரியும் வகையிலும் மோதுகை அமைக்கப்பட்ருத்தல் .
- ✶ இயாகோவின் சூழ்ச்சி எப்பொழுது வெளிப்படும் என்ற ஜயநிலை காணப்படுதல்

(குறிக்கப்பட்ட விடயங்கள் விளக்கப்பட்ருப்பின் 8 புள்ளி வழங்கவும்)

*02)*

i) அன்ரிக்கனி நாடகப் பாத்திரங்கள்

அன்ரிக்கனி, ஏமன், கிரயன், இயூரிடீசி, இசுமெனி, தைரீசியஸ், காவலாளி

(எல்லாப் பாத்திரங்களும் குறிப்பிட்டால் 2 புள்ளி வழங்கவும்)

ii) அன்ரிக்கனி நாடகத்தில் அவலம் வெளிப்பட பாத்திரங்கள் உதவும் விதம்

- ✶ அன்ரிக்கனி, இசுமெனி, ஏமன், கிறயன், இயூரிடீசி ஆகியோருக்கு ஏற்படும் இழப்புக்களும், அழிவுகளும்
- ✶ அன்ரிக்கனி கிரயன், அன்ரிக்கனி - ஏமன்
- ✶ ஏமன் - கிரயன், கிரயன் - இயூரிடீசி ஆகியோருக்கு இடையில் ஏற்படும் மோதுகைகளால் அவலம் உண்டாதல்
- ✶ அன்ரிக்கனி, கிரயன் தனித்த நிலையில் அழிவை நோக்கிச் செல்வதால் அவலம் உண்டாதல்

(இவை விளக்கப்பட்டால் 6 புள்ளி வழங்கவும்)

iii) கிரயனின் பெருவீழ்ச்சி அவலத்தினை உண்டாக்கும் விதம்

- ✶ நற்குணத்தால் வீழ்ச்சி
- ✶ குடும்ப உறுப்பினர்கள் முரண்படுதல் அவர்களின் இழப்பு
- ✶ நாட்டு மக்களிடம் இருந்து தனிமைப் படல்
- ✶ கிரேக்க அவலச்சுவை நாடக மோதுகைகளுடன் கிரயன் எதிர்கொள்ளல்
- ✶ விதி, சாபத்தினை எதிர்கொள்வதால் ஏற்படும் அவலம்

(இதை விளக்கினால் - 7 புள்ளி வழங்கவும்)

*03)*

i) அபசுரம் நாடகத்தினை எழுதியவர்

நா. சுந்தரலிங்கம்

(2 புள்ளி வழங்கவும்)

ii) அபசுர நாடகப் பாத்திரங்களால் வாழ்வின் அர்த்தமற்ற தன்மை வெளிப்படும் விதம்

- ✶ அருள், தியாகர், சிலாயர், பொதுவர் ஆகிய பாத்திரங்களின் பொருத்தமற்ற செயற்பாடுகளை உதாரணம் காட்டி விளக்குதல்
- ✶ நாடக ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை தொடர்வதை சுட்டிக் காட்டல்
- ✶ காலம் வீணாகுதல்
- ✶ தீர்க்கப்பட முடியாத நிலமை
- ✶ வகை மாதிரிப் பாத்திரப் படைப்பு
- ✶ தனிமை நிலை
- ✶ பயம், விரக்தி போன்ற அபத்த நாடகப் பண்புகள் விடையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

*(6 புள்ளி வழங்கவும்)*

iii) அபசுர நாடக முடிவுப் பகுதி பற்றிய உமது கருத்து

- ✶ புறொபெசரை நோக்கி பொதுவர் செல்லது தொடர்பாகவும், ஏனையோரில் இருந்து விடுபடுவதும் எடுத்துக் காட்டப்பட வேண்டும்.
- ✶ பொதுவாரில் ஏற்படும் மாற்றம் இங்கு சுட்டிக் காட்டப்படல் வேண்டும்.

*(இவை உள்ளடக்கி விளக்கி இருப்பின் 7 புள்ளி வழங்கவும்)*

## பிரிவு - B

*04)*

i) நாட்டுக்கூத்தின் இயல்புகள்

- ✶ பாரம்பரிய கதை - இதிகாச, புராண கதை
- ✶ மரபு ரீதியான, கிராமிய பார்வையாளர்
- ✶ வட்டக்களரியில் ஆற்றுகை
- ✶ ஆடல், பாடல்
- ✶ கட்டியகாரனின் வருகை
- ✶ பாரம்பரிய முறையில் வேட உடை
- ✶ நீண்ட நேர ஆற்றுகை
- ✶ பாடல் மூலம் காட்சியமைப்புக்கள்
- ✶ சுத்த மத்தளம், கைத்தாளம், முகவீணை பயன்படல்

*(5 புள்ளி வழங்கவும்)*

ii) நாட்டுக்கூத்தின் ஆற்றுகை முறை

- ✶ இரவு நேர ஆற்றுகை முறை
- ✶ ஆண் நடிகர்கள்
- ✶ ஆண் நடிகர் பெண் வேடம் ஏற்றல்
- ✶ பாடல் மூலம் உரையாடல்
- ✶ ஆடல் மூலம் பாத்திரச் சித்தரிப்பு
- ✶ காப்புப் பாடல்
- ✶ கதையறிமுகம்
- ✶ கட்டியாரன் வருகை
- ✶ வாழிபாடல்

*(5 புள்ளி வழங்கவும்)*

iii) நாட்டுக்கூத்தில் மோடி வேறுபாட்டை ஒப்பிடுதல்

| வடமோடி | தென்மோடி |
|---|---|
| ✶ இதிகாச புராணங்களில் இருந்து கதை தெரிவு செய்தல் | ✶ தமிழ் நாட்டுக் கற்பனைக் கதைகளை கதைப் பொருளாகக் கொண்டுள்ளது. |
| ✶ ஆடல் வேகமானது | ✶ ஆடல் நுனுக்கமானது |
| ✶ பாதம் முழுவதும் நிலத்தில் படும்படி ஆடல் | ✶ பாதத்தின் முற்பகுதி / பிற்பகுதி என்றால் நிலத்தில் படும்படி அடல் |
| ✶ ஆடல் இலகுவானது | ✶ ஆடல் கடினமானது |
| ✶ வீரச்சுவை முதன்மை | ✶ காதல் சுவை முதன்மை |
| ✶ விருத்தப்பா அதிகம் | ✶ தருயாப்பு அதிகம் |
| ✶ பாரங்கூடிய கரப்புகுப்பு | ✶ பாரங்குறைந்த உடை |
| ✶ பாரம் நிறைந்த தெருடமுடி | ✶ பூமுடி |

*(5 புள்ளி வழங்கவும்)*

*05)*

i) கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகப் பணி

- ✶ லங்கா சுபோத விலாச சபையினை நிறுவினர்
- ✶ நவீன நாடகத் தந்தை
- ✶ வசனப்பாங்கான உரையாடலை அறிமுகப்படுத்தினார்.
- ✶ 3 - 5 மணித்தியாலமாக நேரக்குறைப்பு செய்தல்
- ✶ நகர்ப் பார்வையாளருக்காக நாடகம் தயாரித்தல்
- ✶ அவதானித்து நடிக்கும் நடிப்பு முறையை அறிமுகப்படுத்தினர்
- ✶ நெறியாள்கைப் பண்பை அறிமுகம் செய்தல்.
- ✶ குரல் வெளிப்பாட்டில் கவனம் செலுத்தினார்.
- ✶ காட்சியமைப்பினைக் கையாண்டார்.
- ✶ தொழில் நுட்பம் பயன்படுத்தினார்.
- ✶ குறுகிய நேரத்தில் காட்சி மாற்றம்
- ✶ குறித்த நேரத்தில் ஆற்றுகை

*(5 புள்ளி வழங்கவும்)*

ii) பேராசிரியர் வித்தியானந்தனின் நாடகப் பணி

- ✶ நாட்டுக் கூத்தினை நவீனமயப்படுத்தினார்
- ✶ 1½ மணித்தியாலமாக நேரக் குறைப்பு செய்தல்
- ✶ பட்ச்சட்ட மேடை அறிமுகம் செய்தல்
- ✶ ஒரு பக்க வெளிப்பாடு
- ✶ பாடலில் சொற்சுத்தம் பேணினார்
- ✶ முதலாவது வரவிற்கு மட்டும் வரவுப் பாடல்
- ✶ சாதிப் பண்பை கைவிட்டார்.
- ✶ சடங்குப் பண்பு கைவிடப்பட்டது.
- ✶ பெண்கள் பெண் பாத்திரம் ஏற்றல்

- ✶ இசைஞர் திரைமறைவிற்குள் கொண்டு செல்லப்பட்டார்.
- ✶ நகரப் பார்வையாளருக்காக ஆற்றுகை
- ✶ கோறயை அறிமுகப்படுத்தினார்.

*(5 புள்ளி வழங்கவும்)*

iii) பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகப் பணி

- ✶ யதார்த்தப் பண்பு கொண்ட நாடகத்தை அறிமுகப்படுத்தல்
- ✶ நடைமுறை வாழ்வில் இருந்து கதை தெரிவு செய்தல்
- ✶ சமூகப் பிரச்சினைகள் கருக்களாகப் பயன்படுத்தினார்.
- ✶ சாதாரண மனிதப் பாத்திங்களை பயன்படுத்தினார்.
- ✶ அடைமொழிப் பாத்திரங்களை பயன்படுத்தினார்.
- ✶ பேச்சு மொழிகளைப் பயன்படுத்தி உரையாடல்
- ✶ சாதாரண சொற்கள், ஆங்கிலச் சொற்கள், பழமொழிகள் பயன்படுத்தினார்.
- ✶ உள்ளடக்க ரீதியாகவும், உரு ரீதியாகவும் மாற்றம் ஏற்படுத்தினார்.
- ✶ அரசியல் நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், தழுவல் நாடகங்கள் எழுதி அறிமுகம் செய்தார்.

*(5 புள்ளி வழங்கவும்)*

*06)*

i) திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி

- ✶ தவக்காலத்தில் ஆற்றுகை நிகழ்த்தப்படுதல்
- ✶ கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் உணர்வு பூர்வமாக கலந்து கொள்ளல்
- ✶ கத்தோலிக்க மக்களையும், நாடக ஆர்வலர்களையும் ஒருங்கிணைக்கும் நிகழ்வு
- ✶ பரந்த மேடைப் பயன்படும்
- ✶ வெவ்வேறு நடிப்பிடம் முதன்மை பெறுதல்
- ✶ அரங்க மூலகங்கள் திட்டமிட்டு பயன்படுத்தப்படல்
- ✶ ஆளுமைமிக்க வெவ்வேறு நாடகக் கலைஞர்கள் ஒன்றிணைதல்
- ✶ பாத்திரத்தில் தொடர்ச்சிப் பண்பை நடிகர்கள் கொண்டிருத்தல்

*(5 புள்ளி வழங்கவும்)*

ii) தமிழ்ச் சினிமாவின் வெளிப்பாட்டு மொழி

- ✶ கவர்ச்சிப் பண்பு
- ✶ வன்முறை பயன்படுதல்
- ✶ வேகமாகக் கதை நகரும் போக்கு
- ✶ பெரும்பாலும் காதல், தீமையை அழித்தல் போன்ற கருப் பொருள்
- ✶ பாடல் காட்சிகளை முதன்மைப்படுத்தல்
- ✶ இளைஞர்களை கவரும் வகையில் காட்சிகள் அமைக்கப்படுதல்
- ✶ மிகைப்பாட்டுத் தன்மை காணப்படுதல்
- ✶ மாணவர்களின் விமர்சனக் கண்ணோட்டத்தை கருத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

*(5 புள்ளி வழங்கவும்)*

iii) கோலம்

- ✶ வெலிகம - அம்பலாங் கொடைவரை ஆற்றுகை.
- ✶ வேடமுகம் பயன்படுத்தல்
- ✶ ஆண் நடிகர்கள்
- ✶ *3* வகை காணப்படல்
- ✶ தானாயம்பல அரங்கு
- ✶ ஆடல், பாடல்
- ✶ பார்வையாளர் சுற்றிவர காணப்படுவர்
- ✶ நீண்ட சேர ஆற்றுகை
- ✶ கதையில்லா ஆடல்
- ✶ பாத்திரப் பண்புக்குரிய கடல்
- ✶ பாத்திரத்திற்குரிய உடை
- ✶ பாடல் மூலம் உரையாடல்

(*5* புள்ளி வழங்கவும்)

iv) சொக்கரி

- ✶ மத்திய மலைப்பிரதேசத்தில் ஆற்றுகை கண்டி, தம்புள்ள
- ✶ பருவகால ஆற்றுகை
- ✶ ஆடல், பாடல், ஊமம்
- ✶ மகிழக் கூத்துடன் ஒப்பிடல்
- ✶ சபய அரங்கில் ஆற்றுகை
- ✶ இரவு நேர ஆற்றுகை
- ✶ சொக்கரி, குருகாமி, பச்சபீரா, வைத்தியர் - பாத்திரங்கள்
- ✶ இடம்பெயர்ந்த ஐதீகக் கதை
- ✶ அங்கதப் பண்பு
- ✶ முப்பரிமாணப் பாங்கில் முரண்பாடு
- ✶ பாலியல் பண்பு முதன்மை
- ✶ பெண்ணை மையப்படுத்தியது
- ✶ குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனை
- ✶ பாத்திர அறிமுகம் - பொத்தே குரு
- ✶ இடத்திற்கு இடம் வேறுபடும்

(*5* புள்ளி வழங்கவும்)

v) சன்னியக்குமா

- ✶ தொவில் சடங்கின் ஒரு அம்சம்
- ✶ *18* பிசாசுகளின் ஊர்வலம் இடம்பெறுதல்
- ✶ நோய் நீங்கும் தன்மை காணப்படுதல்
- ✶ பேய் விரட்டும் சடங்காக அமைதல்
- ✶ வேடமுகங்களின் பயன்பாடு
- ✶ ஆடல், பாடல் பண்பு

(*5* புள்ளி வழங்கவும்)

The National e-Learning Portal for The General Education